# நீ என் தாசன்;

# நான் உன்னைத் தெரிந்துகொண்டேன். ஏசா. 41 : 10

**நீ பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன். ஏசா. 41 : 10**

இதோ, உன் மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள்.

உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற் போவார்கள். **ஏசா. 41 : 11.**

உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள். **ஏசா. 41 : 12.**

அதிசயங்களை விவரித்துப் பேசுங்கள்

வாக்குத்தத்தத்தை வாஞ்சையோடு வாசிக்கும் சகோதரனே, சகோதரியே,

ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட 4 ஆசீர்வாதங்களை இந்த மாதம் உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். 4 பேருமே நம்முடைய எதிராளிகள் தான்.

1. எரிச்சலாயிருக்கிறவர்கள்.
2. வழக்காடுகிறவர்கள்.
3. போராடினவர்கள்.
4. யுத்தம் பண்ணின மனுஷர்

அநேக நேரங்களில் நீங்கள் யார் என்பதை மறந்து போவதுண்டு.

நீங்கள் யார் ? என்று கர்த்தர் சொல்கிறார் தெரியுமா ?

**நீ என் தாசன்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்.**

ஆதலால் கர்த்தர் என்ன சொல்கிறார் ?

**பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன்** – என்பதாக.

நீங்கள் பயப்படவேண்டாம், ஏனென்றால் உங்களுடன் கர்த்தர் இருக்கிறார். நீங்கள் கர்த்தருடைய பிள்ளை.

கர்த்தர் உங்களைத் தெரிந்துகொண்டார். ஆமென்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே இந்த மாதத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் உங்கள் மேல் நிறைவேறுவதற்கு மூன்று காரியங்களைச் செய்யுங்கள்.

இதற்கு முன்னால் கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த

1. அதிசயங்களை நினைவு கூறுங்கள். 1 நாளா. 16 : 13.
2. அதிசயங்களை தியானித்துப் பேசுங்கள். 1 நாளா. 16 : 9
3. அதிசயங்களை விவரித்துப் பேசுங்கள். 1 நாளா. 16 : 24

சுருக்கமாகக் கூறின், கர்த்தர் செய்த நன்மைகளை நினையுங்கள், தியானியுங்கள், மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். நம்முடைய நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள்.

**"இறைக்கிற கிணறுதான் ஊறும்"** – என்பதாக.

இயேசு சொன்னார்,

**கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.**

உங்கள் சாட்சியை மற்றவர்களுக்குக் கொடுங்கள்.

அப்பொழுது புது சாட்சிகள் உங்கள் வாழ்வில் பிறக்கும். தேவன் உங்கள் வாழ்வில் புது அற்புதத்தை செய்ய இது பெரிய இரகசியமாகும்.

அநேக சபைகளில் விசுவாசிகள் ஞாயிறு அன்று சாட்சிச் சொல்லச் சொல்லும்பொழுது, ஒருவர் முகத்தை ஒருவர் எட்டிப் பார்ப்பார்கள். ஒரு புன்சிரிப்பு சிரிப்பார்கள். பாஸ்டர் இதைப் பார்த்து சலித்துப்போய், ஒரு பாட்டுப் பாடுவோம் எனக்கூறி பிரசங்கத்தை ஆரம்பிப்பார்.

சில சபைகளில், சில உடைந்த ரிக்கார்டுகளைப் போல, சில சாட்சிகள் எழும்புவார்கள். சகிக்க முடியாதபடி ஒரு பாட்டும் பாடுவார்கள். எப்பொழுது சாட்சி சொன்னாலும் அதையே சொல்லிக் கொண்டு இருப்பார்கள். விசுவாசிகள் சலித்து, முணுமுணுத்துக் கொண்டே இருந்தாலும், பாஸ்டர் உட்கார்ந்து கொண்டு அல்லேலூயா, ஸ்தோத்திரம் என மறைமுகமாகக் கூறி நிறுத்த அடையாளம் காட்டினாலும் நிறுத்த மாட்டார்கள். எழுப்புதல் அடைந்து நீட்டிக் கொண்டே போவார்கள். சாட்சியிலும் உப்பும் இராது, சப்பும் இராது வேண்டாம், வேண்டாம்.

என் சகோதரனே, சகோதரியே, இப்படிப்பட்ட சாட்சி வேண்டாம்.

வருகிற ஞாயிறு ஆண்டவரே, நான் உம்மை மகிமைப்படுத்த சாட்சி சொல்ல உதவும் என்று ஜெபியுங்கள். தினந்தோறும் ஜெபியுங்கள். கர்த்தர் அற்புதம் செய்வார். ஜெபித்த குறிப்பிற்கு கிடைத்த பதிலை இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியுடன் ஒரு சில வரிகளில் சாட்சி சொல்லுங்கள். யாவரும் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.

இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து கர்த்தருடைய வருத்தம்,

**கர்த்தருடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்.** சங்கீ. 78 : 11.

**பக்தன் பாடுகிறார்**

இயேசுவே உம் நாமத்தினால், இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள சாட்சியாக, உமக்கென்றும் ஜீவிப்பேன்.

இந்த மாத வாக்குத்தத்தத்தை விசுவாசியுங்கள்.

**நீ என் தாசன்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்.**

**நீ பயப்படாதே; நான் உன்னுடனே இருக்கிறேன்.**